At present, the income ceiling for eligibility for the scholarship for SC / ST / OBC students is fixed at Rs.2.5 lakhs. It is pertinent to mention that the Government of India have revised the income ceiling for the Economically Weaker Section (EWS) to Rs.8 Lakhs and has also raised the income ceiling for schemes such as National Overseas Scholarship and Top-Class Education Scheme to Rs.8 Lakhs for SC / ST students. The refixing of income ceiling has benefitted many students from disadvantaged backgrounds.

According to the All India Survey on Higher Education (AISHE) Report, the Gross Enrolment Ratio (GER) of Scheduled Caste / Scheduled Tribe students and certain Backward Communities remains significantly lower than other students. There is a stark difference in the GER of Scheduled Caste and Scheduled Tribe students, as compared to the general population. Therefore, it is imperative to facilitate their enrolment in larger numbers in higher education institutions. Providing Post and Pre-Matric Scholarships will go a long way in increasing their enrolment in higher education. In our view, increasing the annual income ceiling for Post-Matric and Pre-Matric from Rs.2.5 lakhs to Rs.8 lakhs on par with that of the economically weaker sections is not only essential but also fully justified and warranted.

Therefore, I request your favourable intervention in this matter to consider and increase the annual family income ceiling for Post and Pre-Matric scholarships for SC / ST / OBC students from Rs.2.5 lakhs to Rs.8 lakhs at the earliest.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu

மாணவர்களுக்கான ஒட்டுமொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது என்று கோடிட்டுக் காட்டியுள்ளார். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் அதிக எண்ணிக்கையில் சேர்வதற்குத் தேவையான வசதிகளை செய்து தருவது மிகவும் அவசியமானது என்றும் அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் மெட்ரிக் கல்விக்கு பிந்தைய உதவித் தொகை, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க கணிசமாக பங்களிக்கும் என்று தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கான ஆண்டு வருமான உச்சவரம்பிற்கு ஏற்ப, இப்பிரிவினர்களுக்கான உதவித் தொகைக்கான ஆண்டு வருமான உச்சவரம்பினை 2.50 இலட்சம் ரூபாயிலிருந்து, 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கினால், இச்சமூகங்களில் பெரிய அளவில் மாற்றங்கள் நிகழும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த விவகாரத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் மெட்ரிக் கல்விக்கு பிந்தைய உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைக்கான வருடாந்திர குடும்ப வருமான உச்சவரம்பினை 2.50 இலட்சம் ரூபாயிலிருந்து, 8 இலட்சம் ரூபாயாக உடனடியாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**********

**<u>Text of the D.O. Letter dated 10-12-2024 of Hon'ble Chief Minister of Tamil Nadu Thiru M.K. Stalin, addressed to the Hon'ble Prime Minister of India Thiru. Narendra Modi requesting to increase the annual family income ceiling for Post-Matric and Pre-Matric scholarships for SC, ST, and OBC students from Rs.2.5 lakhs to Rs.8 lakhs</u>**

I wish to draw your attention to the urgent need to enhance the annual family income limit set for the grant of Post-Matric and Pre-Matric Scholarships for SC, ST and OBC students by the Government of India.

செய்தி வெளியீடு எண் : 2178 நாள் : 10.12.2024

## செய்தி வெளியீடு

**ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான Post–Matric மற்றும் Pre–Matric கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைக்கான வருடாந்திர குடும்ப வருமான உச்சவரம்பினை 2.50 இலட்சம் ரூபாயிலிருந்து, 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்தி மாண்புமிகு இந்திய பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம்**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் மெட்ரிக் கல்விக்கு பிந்தைய உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைக்கான வருடாந்திர குடும்ப வருமான உச்சவரம்பினை ஒன்றிய அரசு ரூ.2.50 இலட்சம் என நிர்ணயித்துள்ள நிலையில், அதை உடனடியாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு இன்று (10–12–2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான (Economically Weaker Section) வருமான உச்சவரம்பை ஒன்றிய அரசு 8 இலட்சம் ரூபாயாக மாற்றியமைத்துள்ளதையும், தேசிய வெளிநாட்டு கல்வி உதவித்தொகை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான உயர்தரக் கல்வித் திட்டம் போன்றவற்றில் வருமான உச்சவரம்பு 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதன் காரணமாக பின்தங்கிய நிலையில் வாழும் பல மாணவர்கள் மிகுந்த பயனை அடைந்துள்ளனர் என்று பெருமைபடக் குறிப்பிட்டுள்ளார்.

அகில இந்திய உயர்கல்வி ஆய்வு (All India Survey on Higher Education) தரவுகளின்படி, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சில பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் ஒட்டுமொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio) மற்ற மாணவர்களைக் காட்டிலும் கணிசமாகக் குறைந்துள்ளது தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் ஒப்பிடுகையில், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட